# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறிதிப் பரீட்சை 2017

ஆண்டு: 8 திகதி: 25.11.2017

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி சத்தியதேவி பாலகங்காதரன்

மாணவர் பெயர்: -----------------------------------------------------

| வினாக்கள் | மொத்தப் புள்ளிகள் | மாணவர் பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 10 | |

**வினா1:பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஐந்து சொற்களுக்கு குறையாமல் வாக்கியம் எழுதுக.** (20 புள்ளிகள்)

1 பிறந்த நாள்

________________________________________

________________________________________

2.நல்ல புத்தகங்கள்

________________________________________

________________________________________

3.கடிகாரம்

________________________________________

________________________________________

4.வருமானம்

________________________________________

________________________________________

5.பிரதம விருந்தினர்

________________________________________

________________________________________

6.விட்டுக் கொடுத்து

________________________________________

________________________________________

7.அனுபவம்

________________________________________

________________________________________

8.சிலப்பதிகாரம்

______________________________________________

______________________________________________

9.அர்ப்பணிப்பு

______________________________________________

______________________________________________

10.குறுக்குவழியில்

______________________________________________

______________________________________________

**வினா2: பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடத்தில் மிகப் பொருத்தமான சொல்லை எழுதுக.**(10 புள்ளிகள்)

1. தீயணைப்பு வண்டியின் __________ கேட்டு முத்து வெளியே வந்தான்.
2. கடலில் சென்ற கப்பல் கடும்புயலில்______________ மூழ்கியது.
3. நம் நாட்டு உற்பத்திப் பொருள்கள் பல _______________ எற்றுமதி செய்யப்படுகின்றன.
4. நல்ல புத்தகங்களைப் படிப்பதால் மட்டும் அறிவு பெருகுவதில்லை படித்தவற்றை _________________ மூலமே அறிவு பெருகுகிறது.
5. மழை நாள்களில் வானம் _________________ காணப்படும்.
6. திராட்சைப் பழங்கள் கொத்துக் கொத்தாகக் காய்த்து ____________.
7. சில தசாப்தங்களுக்கு முன்னர் பாடல்களை மாணவர்கள்_____________ செய்து ஒப்புவித்தார்கள்.
8. தமிழில் எழுதப்பட்ட திருக்குறள் பல மொழிகளிலும் ___________ பட்டிருக்கிறது.
9. சென்ற ஆண்டு எமது பள்ளியின் கலைவிழா சிறப்பாக ___________________.
10. பாரதியார் இயற்கையாகவே பாடல் இயற்றும் ________________ பெற்றிருந்தார்.

**வினா 3. பின்வரும் தனிவாக்கியங்களை தொடர் வாக்கியங்களாக எழுதுக.** (15 புள்ளிகள்)

1. அம்மா பழங்களை வாங்கி வந்தார். அவர் அவற்றச் சுத்தம் செய்தார். அவர் மேசையில் அழகாக அடுக்கிவைத்தார்.

___________________________________________

___________________________________________

___________________________________

2. தமிழர்கள் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து வந்தார்கள். அவர்கள் தமிழ்க் கல்வி கற்க வழியை ஏற்படுத்தினார்கள். அவர்கள் பிற்காலச் சந்ததியினர் தமிழ் மொழியைக் கற்க வைத்தனர்.

___________________________________________

___________________________________________

___________________________________

3. நாங்கள் அதிகாலையில் எழுந்தோம். நாங்கள் பொங்கல் பொங்கினோம். நாங்கள் சூரியனுக்குப் படைத்தோம்.

___________________________________________

___________________________________________

___________________________________

4. அச்சுதன் நூலகத்துக்குச் சென்றான். அவன் தமிழ்ப்புத்தகங்களை இரவல் பெற்றான். அவன் அவற்றை வாசித்து மகிழ்ந்தான்.

___________________________________________

___________________________________________

___________________________________

5. வாசுகி திருமண விழாவிற்குச் சென்றார். அவர் திருமண தம்பதிகளை வாழ்த்தினார். அவர் அங்கு விருந்துண்டு மகிழ்ந்தார்.

________________________________

________________________________

________________________________

**வினா 4: பின்வரும் பந்தியை வாசித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை அளிக்க** (15 புள்ளிகள்)

உங்களுக்கு என்னைத் தெரிகிறதா? மக்கள் என்னை அணிகலன்களில் பதித்து அணிந்துகொள்கின்றனர். என்னைச் சாதாரணமாக நினைத்துவிடாதீர்கள். நவமணிகளிலேயே நான்தான் விலைஉயர்ந்தவன்.

மக்கள் என்னைக்கொண்டு பல வேலைகளைச் செய்கிறார்கள் என்பது உங்களுக்கு தெரியுமா? பிற மணிகளைத் துளையிடுவதற்கும் பட்டை தீட்டுவதற்கும் நான் பயன்படுகிறேன். ஆனால், என்னை வேறு எந்தத் கருவியாலும் துளையிட முடியாது. “வைரத்தை வைரத்தால்தான் வெட்ட முடியும்” என்றொரு பழமொழியைக் கேட்டிருப்பீர்கள்! இப்போது என்னை யாரென்று தெரிகிறதா? நான்தான் வைரம்.

எனது பிறப்புப் பற்றிக் கேட்டால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் பூமியில் மரமாக நின்ற நான் பூமிக்குள் புதைந்து போனேன். அங்கேயே கிடந்து செறிவு பெற்றுக் கரிப்பாறையாக உருவானேன். நாளடைவில் நான் அதிகமான அமுத்தத்தாலும் வெப்பத்தாலும் மணிப் பாறையானேன். என்னை வெட்டியெடுத்துப் பட்டை தீட்டிய பிறகே நான் உங்கள் முன் ஒளி வீசும் வைரமாகத் திகழ்கிறேன்.

எனக்கு மூதாதையர்கள் பலர் உள்ளனர். அவர்கள் தென்னாபிரிக்கா, இந்தியா, பிரேசில் போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்கள். வரலாற்றுச் சிறப்பும் அவர்களுகுண்டு. அவர்களுள் ஒருவரான கல்லினன் என்பவர், உலகிலேயே மிகப்பெரிய வைரம் என்ற பெயர் பெற்றவர். இங்கிலாந்தின் மன்னராயிருந்த ஏழாம் எட்வர்டுக்கு அவர் பரிசாய்ப் போய்ச் சேர்ந்ததால் ஆங்கிலப் பேரரசின் செங்கோலில் வீற்றிருக்கும் அரிய பேறு பெற்றார். இந்தியாவில் கோகினூர் வைரம் என்ற புகழ்பெற்ற மற்றொருவர் இங்கிலாந்து மன்னரின் மணிமகுடத்தில் ஒளி வீசுகிறார். மேலும் மொகலாய மன்னர்களுக்குரிய மயில் அரியணையிலும் என் மூதாதையர்கள் கௌரவமாக வீற்றிருந்தார்கள்.

அன்று மன்னர்கள் மட்டுமே என்னை அணிந்தனர். ஆனால் இன்று வசதி படைத்தவர்கள் எல்லோரும் என்னை வாங்கி அணிகின்றனர். ஆனால், என்னை நன்கு பரிசோதித்து

வாங்கி அணிவதே நல்லது. எங்களில் யார் குறையில்லாமல் ஒருக்கிறார்களோ அவர்களுக்கே மதிப்பு உண்டு.

பழங்காலத்தில் போருக்கு செல்பவர்கள் தங்களுக்கு வெற்றி கிட்டவேண்டும் என்றெண்ணி எங்களை அணிந்து செல்வதுண்டு. நான் தன்னம்பிக்கை, ஊக்கம், வலிமை, அமைதி ஆகியவற்றின் சின்னமாக விளங்குகின்றேன். மனிதர்களுல் வலிமை வாய்ந்தவரை வைரம் பாய்ந்த கட்டை என்று விமர்சிக்கிறார்கள். அதுமட்டுமா? திருமணம் புரிந்து கொண்டதன் அடையாளமாகவும் நான் மணமக்களின் மோதிர விரல்களுக்கு அணி சேர்க்கிறேன். என்னைப் பற்றி இன்னும் கூறா வேண்டுமா என்ன?

1.வைரத்தை வைரத்தால்தான் வெட்ட முடியம் என்று சொல்வது ஏன்?

______________________________

______________________________

2.வைரம் உருவான விதம் பற்றி எளுதுக.

______________________________

______________________________

3. வரலாற்றுச் சிறப்பு மிக்கது வைரம் என்பதை நிருபிக்க உரைப் பகுதியிலிருந்து எடுத்துக்காட்டுகள் எளுதுக. (பந்தி 4)

______________________________

______________________________

4. வைரம் பாய்ந்த கட்டை என்று ஒருவரைக் கூறுவதற்குக் காரணம் என்னவென்று நீ நினைக்கின்றாய் என்பதை எளுதுக

______________________________

______________________________

5.வைரக் கல்லுக்குள்ள சிறபுத் தன்மைகளைக் எளுதுக.

6.பலரும் இன்று அதிக விலை கொடுத்து இம்மாதிரியான கற்களை அணிந்துகொள்வது பற்றி உன் கருத்து என்ன?

**வினா 5: 120 சொற்களுக்குக் குறையாது ஒரு கடிதம் எழுதுக** (20 புள்ளிகள்)

இலங்கையிலிருந்து உன் மாமா சிட்னியைச் சுற்றிப் பார்க்க வரவிருக்கிறார். அவர் சிட்னியைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறார். சிட்னியின் சிறப்புகள் குறித்து விளக்கி அவருக்கு நீ எழுதும் கடிதம்.

அல்லது

உன் தோழன்/தோழி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அண்மையில் வீடு திரும்பியுள்ளார். அவரின் உடல் நிலை குறித்து விசாரிப்பதோடு விரைவில் அவர் குணமடைய ஆறுதல் கூறி நீ எழுதும் ஒரு கடிதம்.

வினா 6: கட்டுரை

**கீழ் வரும் தலைப்புகளில் எதாவது ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.** (20 புள்ளிகள்)

1. நீ மதித்துப் போற்றும் ஒரு ஆசிரியர்
2. நீ கல்வியில் சிறந்து விளங்க உன் குடும்பத்தினர் எவ்வாறெல்லாம் உனக்கு உதவலாம்.
3. உடல் ஆரோக்கியத்திற்கு உடற்பயிற்சியும் சத்துணவும் அவசியம் என்பதை விளக்கி எழுதுக.